இணைப்பு —I

[122-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் உரை

கோரிக்கை 29—தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும்

பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் "கோரிக்கை 29—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும்" என்பதன்கீழ் ரூ. 3,35,12,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று முன்னுரைக்கின்றேன். இக் கோரிக்கையில், வேலை தேடித்தரும் பணிகளுக்கும் கைவினைப் பணியாளர் பயிற்சிக்கும் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் சேர்ந்துள்ளது. தொழிலாளர் நலத் துறை, வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை ஆகிய துறைகள் 1974-75 இல் ஆற்றிய பணிகளை விவரிக்கும் ஆய்வுரை பேரவையின்கண் வைக்கப்பட்டுள்ளது. அதனைக் காணுமாறு மதிப்பிற்குரிய உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் நலத் துறை கொள்கையின் முக்கியமான சில அம்சங்கள் பற்றியும் சாதனைகள் குறித்தும் இப்போது சுருங்கச் சொல்லி விளக்க விரும்புகிறேன்.

2. தொழில் துறையில் அமைதியும் தொழில் செழித்து வளரவும், தொழிலாளர் நலன் ஓங்கவும் உகந்ததொரு சூழ்நிலையும் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலக் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோள்களாக விளங்குகின்றன. தொழிலதிபர், தொழிலாளர் ஆகிய இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த முழுவாய்ப்பு அளிக்கப்படுகின்ற அதே சமயத்தில், தொழில் துறை அமைதி குலையும்போது அல்லது உற்பத்தி தடைப்படும்போது அந்நிலையில் அரசு தலையிட்டு அமைதி மீண்டும் நிலைப்பெறச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்; ஏனெனில், தொழிலாளர் நலன், தொழில் துறையின் நலன் மட்டுமின்றி சமுதாய நலனும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது; அத்தகைய சூழ்நிலையில், இம்மூவகையினரின் நலனுக்கும் தீங்கு விளையக்கூடுமென்றிருக்கையில் அரசு வாளா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தொழிலாளர் பாதுகாப்பிற்கும், அவர்தம் சுகாதாரம், நலன் இவற்றைக் காக்கும் பொருட்டும், தனியார் துறை, பொதுத் துறை இவற்றிற்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்துமாறு செய்தலும் அரசின் கொள்கையாகும். நமது தொழிலாளர் நலக் கொள்கையின் புதிய அம்சமான தொழிலாளர் நலத் திட்டங்கள் தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் செயல் வரம்பிற்குள் வராத துறைகளில் தொழிலாளர்க்கு வசதிகளைச் செய்து தர விழைவன ஆகும்.